# CAFCASS-ன் பங்களிப்பு குடும்ப நீதிமன்ற நடைமுறைகளில் ஈடுபட்டுள்ள குழந்தைகளின் நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்

(Tamil)

## CAFCASS என்றால் என்ன?

குழந்தைகள் மற்றும் குடும்ப நீதிமன்ற ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகள் - CAFCASS – குடும்ப நீதிமன்ற நடைமுறைகளில் ஈடுபட்டுள்ள குழந்தைகளின் நலனைப் பாதுகாத்து[1] மேம்படுத்துகிறது. எங்களின் வழக்குரைஞர்களின் தொழில்வல்லமை திறன், அனுபவம் மற்றும் ஆர்வம் மூலமாக எங்களின் பணிகளை நாங்கள் செய்கிறோம். எங்களின் அனேக வழக்குரைஞர்கள் உங்களால் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள், இருப்பினும் சிலர் சுய-வேலை ஒப்பந்தங்களில் எங்களுக்காக பணியாற்றுகிறார்கள். நாங்கள் குடும்ப நீதிமன்றங்களில் பணியாற்றுகிறோம். இவை குற்றவியல் நீதிமன்றங்கள் அல்ல.

---

1 குழந்தைகள் சட்டம் 2004 குழந்தைகளின் நலனை மேம்படுத்துவது மற்றும் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளை செய்வதற்காக குழந்தைகளுடன் பணியாற்றும் அமைப்புகள் மற்றும் முகைமைகளுக்கு சட்டப்பூர்வமான கடமையை வைக்கிறது, குறிப்பாக சுகாதாரம், பாதுகாப்பாக இருத்தல், மகிழ்தல் மற்றும் சாதித்தல், நேர்மறையான பங்களிப்பை அளித்தல் மற்றும் பொருளாதார ரீதியாக நன்றாக இருப்பதை அடைதல்.

## CAFCASS என்ன செய்கிறது?

எங்களின் பணி குடும்ப நீதிமன்ற நடைமுறைகளில் ஈடுபட்டுள்ள குழந்தைகளின் நலன்களை பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவதாகும். எங்கள் வழக்குரைஞர்கள் குழந்தைகள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருடன் பணியாற்றி, குழந்தைகளின் கருத்துக்கள் கேட்கப்படுவதையும் அவர்களின் தேவைகள் சந்திக்கப்படுவதையும் உறுதி செய்கிறார்கள். முக்கிய வகையான வழக்குகளில் நீதிமன்றம் எங்களை உதவ கேட்பது எப்போது என்றால்:

- பெற்றோர்கள் பிரியும்போது அல்லது விவாகரத்துப் பெரும் போது மற்றும் தங்களின் குழந்தைகளுக்கு எந்தவிதமான ஒப்பந்தங்களை எட்டாத போது
- சமூக சேவைகள்[2] ஈடுபடும் போது மற்றும் குழந்தைகள் தலையிட்டு அவர்கள் பெற்றோர்களின் கவனிப்பிலிருந்து பாதுகாப்புக்காக நீக்கப்படும் போதும்
- குழந்தை தத்தெடுக்கப்படும்போது

நாங்கள் நீதிமன்றங்கள், சமூக சேவை அமைப்புகள், கல்வி மற்றும் சுகாதார அதிகார நிறுவனங்கள் மற்றும் அனைத்து ஒரேமாதிரியான முகமைகளிலிருந்தும் சுதந்திரமானவர்கள்.

## CAFCASS வழக்குரைஞர்களின் பல்வேறு பங்களிப்புகள் என்ன?

எங்கள் வழக்குரைஞர்களின் பங்களிப்பு வழக்கின் தன்மை மற்றும் அவர்களை நீதிமன்றம் அவ்வாறு என்ன செய்ய கேட்கிறார்கள் என்பதைப் பொருத்தும் இருக்கும். நான்கு முக்கிய பங்களிப்புகள் உள்ளன:

- பெற்றோர்கள் விவாகரத்து செய்யும் போது அல்லது பிரியும் போது தங்கள் குழந்தைகளுக்கான ஒப்பந்தம் ஏதும் ஏற்படாத போது, குழந்தைகள் மற்றும் குடும்ப அறிக்கையாளர்கள் தலையிடுகிறார்கள். சில நேரங்களில் நீதிமன்றத்தை இனிமேலும் ஈடுபடுத்தாமல் குழந்தைகளின் ஏற்பாடுகளுக்கான ஒப்பந்தங்கள் ஏற்படலாம், அப்படியில்லையெனில் குழந்தை மற்றும் குடும்ப அறிக்கையாளர்கள் தங்கள் பணிகளை செய்து பிரச்சனையை தீர்க்க முயற்சிக்கலாம், அல்லது விசாரனை நடத்தி நீதிமன்றத்திற்கு அறிக்கை எழுதலாம்.
- சமூக சேவை அமைப்புகள் தலையிட்டு தத்தெடுப்பதற்காக வாதாடும்போது, குழந்தைகளின் காப்பாளர்கள் குழந்தைகளின் நலன்கள் குறித்து வழக்கின் போது பிரதிநிதித்துவப்படுத்தலாம்.

---

[2] இந்த சிற்றேட்டில், ‘சமூக சேவை அமைப்புகள்’ என்பது சமூக சேவை இயக்கங்களை குறிப்பாக குழந்தைகளின் சமூக பராமரிப்பை மேற்கொள்ளும் அமைப்புகளைக் குறிக்கிறது.

- பெற்றோர்களுக்கு தத்தெடுத்தல் என்றால் என்ன என்பது குறித்து உணர்ந்து கொள்வதை உறுதி செய்து அவர்களுக்கு அதில் ஒப்புதல் இருக்கிறதா இல்லையா என்பதை அறிக்கையளிக்கும் அதிகாரிகள் ஏற்படுத்துவார்கள்.
- கார்டியன்ஸ் அட் லிடெம் (*Guardians ad litem)* (குழந்தைகளுக்கான நீதிமன்றம் நியமிக்கும் காப்பாளர்கள்) பெற்றோர்கள் விவாகரத்துப் பெறும் போதோ அல்லது பிரியும் போதோ எந்தவொரு ஒப்பந்தத்துக்கு வரமுடியாமல் போனால் நீதிமன்றத்தால் வழக்குகளில் நியமிக்கப்படுவார்கள். இது வழக்கில் ஏதேனும் குறிப்பிட்ட சிரமங்கள் இருந்தால் மட்டுமே நடைபெறும். குழந்தை நடைமுறைக்கான ஒரு தரப்பாக ஆக்கப்படும் மற்றும் கார்டியன் அட் லிடெமின் பங்களிப்பு அவர்களின் உரிமை மற்றும் நலன்களுக்கான தனியானப் பிரதிநிதித்துவமாகும்.

**இந்த பங்களிப்புகள் பொதுவில் கொண்டுள்ளது என்ன?**

அனைத்து பங்களிப்புகளும் பின்வரும் சிலவற்றை அல்லது அனைத்தையும் ஈடுபடுத்துகின்றன:

- குழந்தைகளின் சிறப்பு நலனில் சிறப்பு கவனம் செலுத்துவது
- அந்த நலன்களுக்காக உறுதியாக இருப்பது
- பொருத்தமான விசாரணைகளை மேற்கொள்வது
- நீதிமன்றத்திற்கு அறிக்கையை எழுதுவது.

ஒவ்வொரு வழக்குரைஞரின் பணியில் மிக முக்கியமானது குழந்தைகளுடன் நேரத்தை செலவழித்து அவர்களுடன் பேசி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் மற்றும் எப்படி உணர்கிறார்கள் என்பதை அறிவதாகும்.

**குழந்தைகளுக்கு எது சிறந்தது என்று CAFCASS எவ்வாறு அறியும்?**

எங்களின் வழக்குரைஞர்கள் குழந்தைகள் மற்றும் குடும்பங்களுடன் பணியாற்றுவதற்கு பயிற்சி பெற்று அனுபவம் வாய்ந்தவர்கள்.

**மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை CAFCASS இரகசியமாக வைக்கிறதா?**

CAFCASS வழக்குரைஞருக்கு நீங்கள் அளிக்கும் எந்த தகவலும் நீதிமன்றத்திற்கான அவர்களின் அறிக்கையில் சேர்க்கப்படும், மற்றும் மற்ற நோக்கங்களுக்காக அவை தரப்படலாம். உதாரணமாக, குழந்தையை பாதுகாக்க வேண்டிய தேவையிருந்தால், தகவலை மற்றொரு முகமைக்கு மாற்றப்படலாம். கூடுதலாக, நாங்கள் குழந்தைகள்

மற்றும் குடும்பங்கள் பலன் அடைவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளோம் மற்றும் நேரத்திற்கேற்ப பெயரேதும் குறிப்பிடப்படாமல் உங்களின் தகவல்கள் அத்தகைய ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படலாம்.

**குழந்தை என்ன விரும்புகிறதோ அதை நீதிமன்றம் செய்யுமா?**

வழக்குரைஞர்களின் அறிக்கை எப்போதும் குழந்தைகளின் விருப்பம் மற்றும் உணர்வுகளை நீதிமன்றத்திற்கு சொல்லும். நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொள்ளும் விஷயங்களில் இதுவும் ஒன்றாகும், ஆனால் அது நீதிமன்றம் எப்போதும் குழந்தை என்ன விரும்புகிறதோ அதை எப்போதும் செய்யும் என்று பொருள் கொள்ள முடியாது. குழந்தைக்கு எது சிறந்தது என்று அது கருதுகிறதோ அதை நீதி மன்றம் செய்யப் பார்க்கும்.

**நீதிமன்றம் CAFCASS வழக்குரைஞர் ஆலோசனை சொல்வதையே எப்போதும் செய்யுமா?**

என்ன நடக்கும் என்பதை நிர்ணயிப்பது நீதிமன்றமாகும், ஆனால் நீதிமன்றம் எங்களின் வழக்குரைஞர் என்ன சொல்கிறார் என்பதை மிகவும் கவனமாக குறிப்பெடுத்துக் கொள்கிறது. ஒரு நீதிமன்றம் ஒரு வழக்குரைஞர் சொல்வதை ஒப்புக் கொள்ளவில்லை என்றால் அது ஏன் என்பதை விளக்கும்.

**என்னுடையக் கருத்துக்கள் கணக்கிலெடுக்கப்படுமா?**

எங்களின் அனைத்து சேவைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து உங்களின் பின்னீட்டை நாங்கள் வரவேற்கிறோம், அதனால் இந்தப்படிவம் எங்களின் சேவைகளை மேம்படுத்துவதிலும் முன்னேற்றுவதிலும் முக்கியப் பகுதியாகும். குழந்தைகள், இளைஞர்கள், பெற்றோர், உறவினர்கள், நீதிமன்றங்கள் மற்றும் பிற முகமைகள் – உள்ளிட்ட எங்களின் சேவையைப் பயன்படுத்தும் அனைவரிடமிருந்து கேட்பதற்கு விரும்புகிறோம்.

இந்த பின்னீடானது :

- எங்களின் கொள்கைகள் அல்லது பணி நடைமுறைகள் அல்லது எங்களின் சேவைகளின் பிற பண்புக்கூறுகள் குறித்த **ஒரு குறிப்புரையாக** இருக்கலாம்.
- எங்களின் பணி அல்லது தனிப்பட்ட வழக்குரைஞருக்கான **ஒரு பாராட்டாக** இருக்கலாம்.
- எங்களுடனான உங்களின் நடைமுறைத் தொடர்பின் பண்புக்கூறுப் பற்றிய ஒரு **புகாராக** இருக்கலாம்.

நாங்கள் எங்களின் சேவைகள் குறித்த அனைத்து கருத்துரைகள், பாராட்டுகள் மற்றும் புகார்கள் குறித்து பதிவு செய்து, கண்காணித்து மறுஆய்வு செய்வோம், மற்றும் அதன் வெளிப்பாடுகளை எங்களின் ஆண்டறிக்கையில் வெளியிடுவோம்.

எங்களின் சேவையை மேம்படுத்தும் ஆர்வத்தில் மற்றும் ஆய்வு நோக்கங்களுக்காக, நடைமுறைகள் முடிவுற்றதும் நாங்கள் உங்களின் கருத்துக் குறித்து அறிவதற்காக உங்களை அணுகுவோம்.

**எவ்வாறு நான் என் கருத்துரைகள், மற்றும் பாராட்டுகளைப் பின்னீடு செய்வது?**

எந்தவொரு கருத்துரை அல்லது பாராட்டுதலை (எழுத்துமூலமாக விரும்பத்தக்கது) சம்பந்தப்பட்ட வழக்குரைஞரிடம் தெரிவிக்கவும், அல்லது அவற்றைஇந்தச் சிற்றேட்டின் பின்னால் உள்ள முகவரியில் உள்ளூர் CAFCASS மேலாளருக்கு அனுப்பவும். நீங்கள் உங்கள் கருத்துரைகளை அல்லது உங்களின் எண்ணங்களை எங்களின் தேசிய அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலமாக yourviews@cafcass.gov.uk வில் தெரிவிக்கலாம்.

உங்களின் வழக்கின் முடிவில் உங்கள் வழக்கில் ஈடுபட்டிருந்து வழக்குரைஞர் அல்லது அவர்தம் மேலாளரிடம் ஒரு பின்னீட்டு கூட்டத்திற்காக கோரலாம்.

**CAFCASS அளிக்கும் சேவை எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை என்றால் என்ன செய்வது.**

குழந்தைகளுக்கு அவரிகளின் வாழ்க்கையின் சிரமமான நேரத்தில் குரல் கொடுப்பதற்காக, நாங்கள் எங்கள் சேவையின் தரத்தை அனைத்து குடும்ப நடைமுறைகளிலும் உயர்ந்ததாக வழங்க எண்ணியுள்ளோம். சேவைகளின் பயனாளர்கள் நாங்கள் இந்த எண்ணத்தில் இருந்து வீழ்ந்துவிட்டதாக நம்புவதை அறிவது எங்களுக்கு மிகவும் முக்கியமாகும்.

புகார்கள் விரைவாகவும், நியாயமாகவும் மற்றும் ஆற்றலுடனும் முடிந்தளவில் சந்திக்கப்படுவதை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு புகார்கள் செயல்முறை எங்களிடம் உள்ளது. புகார்கள் செயல்முறைக்கான ஒரு அறிமுகம் கீழேக் காணப்படலாம். முழு செயல்முறையும் சேவைப் பயனாளர்களுக்கான[3] குறிப்பேட்டில் அமைக்கப்பட்டுள்ளது, அது உங்களின் உள்ளூர் CAFCASS

[3] உங்களின் எண்ணங்களின் மதிப்பீடு – எங்களின் பணிக் குறித்த ஒரு கருத்துரை, பாராட்டு அல்லது புகார் தெரிவிப்பது

அலுவலகத்தில் கிடைக்கும் அல்லது *தகவல்கள்* பகுதியில் எங்கள் இணைய தளம் www.cafcass.gov.uk விலிருந்து கிடைக்கப் பெறலாம்.

**நான் புகார் தெரிவிக்கவேண்டுமானால் என்ன செய்வது?**

முதலில், நீங்கள் சேவையின் எந்தப் பண்புக்கூறு குறித்தும் நீங்கள் மகிழ்ச்சியாக இல்லாமல் இருப்பதை தொடர்புடைய CAFCASS வழக்குரைஞரிடமே தெரிவிக்கலாம். அதில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வாய்ப்புகள் இருக்கலாம். மாற்றாக முன் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது போல் நீங்கள் ஒரு பின்னீட்டுக் கூட்டத்தை உங்களின் வழக்கின் முடிவில் கோரலாம்.

நீங்கள் இதை செய்ய விரும்பாமல் அதற்கு பதிலாக புகார் தெரிவிக்க விரும்பினால், உள்ளூர் CAFCASS மேலாளரை முடிந்தவிரைவில் பார்க்கவும், புகாரைத் தெரிவிக்க தொடர்ந்துவரும் பக்கத்திலுள்ள காலஅளவுகளை மனதில் கொள்ளவும்.

*அறிக்கையில் உள்ள உள்ளடகத்தை நீங்கள் ஏற்கவில்லை என்றால், பொதுவாக அதை வழக்கு விசாரயையின் போதே எழுப்புவது சிறந்ததாகும்.*

*நீதிமன்றத்தின் முடிவின் வெளிப்பாடுகளை மாற்றுவதற்கு எங்களிடம் புகார் தெரிவிப்பதன் மூலம் செய்ய இயலாது. நீங்கள் நீதிமன்றத்தின் முடிவை ஏற்கவில்லை என்றால், நீதிமன்றத்தின் முடிவுக்கு எதிராக சாத்தியமுள்ள மேல்முறையீடு குறித்து நீங்கள் ஒரு சட்டப்பூர்வமான ஆலோசனையைப் பெற வேண்டியிருக்கும்.*

CAFCASS புகார்களை ஏற்பதற்கு கால வரம்பு உள்ளது என்பதைக் குறித்துக் கொள்வது முக்கியமாகும். பெரியவர்களுக்கு நிகழ்ச்சி அல்லது நடவடிக்கை நடந்ததிலிருந்து மூன்று மாதங்களாக இது இருக்கும். *உங்கள் எண்ணங்களின் மதிப்பீடு* என்ற குறிப்பேட்டை இந்த கால வரம்புகள் குறித்த முழுவிவரங்களுக்காகப் பார்க்கவும்.

நீங்கள் தெரிவித்த புகாரினைப் பெற்றுக் கொண்டதற்கான ரசீதினை CAFCASSலிருந்து ஐந்து வேலை நாட்களுக்குள் எதிர்பார்க்கலாம்.

குழந்தைகளிடமிருந்தான புகார்கள் எப்போது வேண்டுமானாலும் பெறப்படலாம். ஒரு குழந்தை புகார் தெரிவிக்க விரும்புமாயின் அதற்கான ஒரு தனிப்பட்ட வழக்குரைஞரின் ஆதாரவு செயல்முறை முழுவதற்கும் அளிக்கப்படும்.

**குழந்தைப் பாதுகாப்பு**

குழந்தைகள் குறிப்பிட்ட பாதிப்பிற்கான ஆபாத்தில் உள்ளார்களா என்பதை அறிவதற்கான சோதனையை பிற முகமைகளிடம் எடுத்துக் கொள்கிறோம். இது குழந்தைகள் குடும்ப வன்முறையில் சாட்சியாக இருந்ததும் அடங்கும். குழந்தைப் பாதுகாப்பு பதிவேடு, சமூக சேவை அமைப்புகள் மற்றும் காவல்துறையிடம் வழங்கமான சோதனைகள் மேற்கொள்ளப்படும். மேலும் பரிசோதனைகள் கூடுதல் முகமைகளுடன் (உதா. ஜிபிக்கள், பள்ளிகள்) தேவைப்படுமா என்பது குறித்து நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம். தகவல்கள் நீதிமன்ற அறிக்கையை தயார் செய்வதில் பயன்படுத்தப்படும் மற்றும் அவை சமூக சேவை அமைப்புகளுடனும் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

நாங்கள் குழந்தைகள் அல்லது இளைஞர்கள் மற்றும் அவர்களின் காப்பாளர்களின் பாதுகாப்பை ஆபத்தில் வைக்கும் ஏற்பாடுகளை ஆதரிக்க மாட்டோம்.

**வேற்றுமை**

நாங்கள் குழந்தைகளின் தனிப்பட்டத் தேவைகளுக்கு ஆதரவளிக்கவும் அவர்கள் வளரும் வெவ்வேறு சமூகங்களை மதித்தி, மதிப்பீடளிக்கவும் எண்ணியுள்ளோம். பிறப்பினம், மொழி மற்றும் சிறப்பு தேவைகள் போன்ற எங்கள் சேவை பயனளார்களின் சேவைத் தொடர்பான தகவல்களை குழந்தைகள் மற்றும் அவர்தம் குடம்பங்களுக்கான எங்களின் சேவையின் தரத்தை தொடர்ந்து மேம்படுத்துவதை இயலச் செய்வதற்காக பதிவு செய்து கண்காணித்து வருகிறோம். இந்தத் தகவல்கள் எங்களுக்கு சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக இனம் சார்ந்த சட்டம் 1976 (2000 மற்றும் 2003 திருத்தப்பட்டது) மற்றும் இயலாமை வேறுபாடுகள் சட்டங்கள் 1995 மற்றும் 2005 உள்ளிட்ட சட்டத்தேவைகளின்படி உதவுகிறது.

**தகவல்**

நாங்கள் தகவல்களை சேகரித்து, செயல்முறைப்படுத்தி ஏற்படுத்துவது சட்டப்படி மேற்பார்வையிடப்படுகிறது. பின்வரும் அம்சங்கள் உங்களுக்கு ஆர்வமானதாக இருக்கக்கூடும்:

- எங்களின் பணியின் தன்மைக்கு எங்களின் சேவைப் பயனாளர்களின் தனிப்பட்டத் தகவல்களை செயல்முறைப்படுத்த வேண்டியுள்ளது. அத்தகைய அனைத்து நடவடிக்கைகளும் தரவு பாதுகாப்பு சட்டம் 1998ன் படி

மேற்கொள்ளப்படுகிறது. எங்களின் தரவு பாதுகாப்பு பதிவேடு குறித்த பதிவுகுறிப்பினை www.cafcass.gov.uk வில் பார்க்கலாம்.

- தரவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ், உங்களைப் பற்றி நாங்கள் கொண்டுள்ள தகவல்களின் ஒரு பிரதியைக் கேட்க நீங்கள் உரிமையுடையவர்களாகிறீர்கள்.
- தகவல் சுதந்திர சட்டம் 2000க்கு இணக்கமாக நாங்கள் எங்கள் சேவைகளைப் பற்றிய தகவல்களை அளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

தரவு பாதுகாப்பு சட்டம் அல்லது தகவல் சுதந்திர சட்டத்தின்படி நாங்கள் எவ்வாறு பணியாற்றுகிறோம் என்பதைப் பற்றி மேலும் விவரங்களுக்கு, தயவு செய்து எங்களின் இணையதளம் www.cafcass.gov.uk வின் *தகவல்கள்* பகுதியை பார்க்கவும் அல்லது உங்கள் உள்ளூர் CAFCASS அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

எங்களின் இணையதளம் எங்களின் சேவைகளின் முழுஅளவிலான தகவல்களைக் கொண்டுள்ளது.

V3-05